**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 25.02.2026 |
| Case No. | : **O.S. 469/2019** | Nationality | : Indian |
| Name | : ஜெஸ்மின் | Religion | : |
| Father's/Husband's Name | : சுரேஷ்குமார் | Age | : 52 |
| Village | : எஸ். புதூர் | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

<u>பி.வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதிக்கு நிரதிநிதித்துவ அதிகார முகவர் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் தரப்பினர்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியும். வழக்கின் சொத்து விபரம் எனக்கு தெரியும். எத்தனை புல எண்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 218/9, 217/2, ஆகிய புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி புல எண் பொறுத்துதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கின் வாதி ராமசாமியை எனக்கு தெரியும். ராமசாமியின் வாரிசுகளை எனக்கு தெரியும். என்னுடைய கணவர் பெயர் சுரேஷ்குமார் . எனது கணவர் அரசு போக்குவரத்து கழகத்தில் செக்கராக பணிபுரிந்து வந்து கடந்த ஓராண்டுக்கு முன்பு பணி ஓய்வு பெற்றுவிட்டார். எனது கணவர் நல்ல முறையில் இருக்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது எனது கணவர் பணியில் இருந்தார். தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக

தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயார் செய்தார்கள். வழக்கு தாக்கல் செய்தபோது நாங்கள் காரைக்கால் ரோட்டிற்கு தெற்கு பக்கம் குடியிருந்து வந்தோம் என்றாலும் அதற்கு பட்டா இல்லை என்றாலும் சரிதான். அந்த இடமானது பொதுப்பணி துறைக்கு சொந்தமான படுகை நிலம் என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கு அருகில் காரைக்கால் ரோட்டிற்கு தெற்கு பக்கமும் வடக்கு பக்கமும் வாதிகளுக்கு சொந்தமான இடம் இருந்து அதில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் தெற்கு பக்கம் இருந்த இடத்தை காலி செய்து வடக்கு பக்கம் சொந்தமாக வீடு கட்டி குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. தெற்கு பக்கம்தான் குடியிருக்கிறோம். நாங்கள் வசிக்கும் வீடு கூரை வீடு என்றால் சரியல்ல ஓட்டு வீடும் உண்டு. காரைக்கால் ரோட்டிற்கு வடக்கு பக்கம் வாதிகள் வசித்து வரும் வீட்டிற்கும் மேற்கு பக்கம் எனக்கு சொந்தமான புதிய மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த மாடி வீடு புழக்கத்தில் உள்ளது அதில் நாங்கள் வசிக்கவில்லை. கூரை வீட்டில்தான் வசித்து வருகிறோம். கூரை வீட்டிற்கு என்று தனி மின் இணைப்பு இல்லை. ஓட்டு வீட்டிற்கு உள்ளது. மின் இணைப்பு முனியாண்டி பெயரில் உள்ளது. வீட்டுவரி தங்கராசு பெயரில் செலுத்தி வருகிறேன். தங்கராசு எனது மாமனார். வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்து சம்மந்தமாக ராமசாமி இறந்த பின்பு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு நானும் வாதியும் ஒருவர் மீது ஒருவர் திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் காவல் நிலையத்தில் இருவரையும் அழைத்து பேசி சமாதானம் செய்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். பொதுப்பணி துறையில் உள்ள தென்னை மரங்களை அப்புறப்பத்திய விவரம்

எனக்கு தெரியும். அது காய்ப்பு மரங்கள் ஆகும். உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். உயர் நீதிமன்ற வழக்கு தங்கராசுக்கும் கோமதிக்கும் இடையே நடந்த வழக்காகும். 17.03.2018 ல் தாவா சொத்தில் காம்பவுண்டு சுவர் கட்டுவதை நான் தடுத்தேன். புகார் எதுவும் கொடுக்கவில்லை. 17.06.2017 ல் எனக்கும் வாதிக்கும் மரம் வெட்டும் பிரச்சனை ஏற்பட்டு புகார் கொடுத்து காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். 18.06.2017 ல் வாதி வீட்டில் வேலை செய்த விக்டர்வில்லியம் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் என் கணவர் மீது திருநீலக்குடி காவல் நிலையத்தில் குற்ற எண்.117/2017 என்ற வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் கொடுத்த புகாரின்பேரில் விக்கடருக்கு எதிராக திருநீலக்குடி காவல் நிலையத்தில் குற்ற எண்.116/2017 என்ற வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். என் கணவர் மீது வழக்கு பதிவு செய்து என் கணவரை பணியிடை நீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).